www.agaram.lk

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவ நாகரிகம் I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. மனிதன் தன் உடல், உள இயல்புகளை, திறமைகளை பயன்படுத்தி, வளப்படுத்தி வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு எனக்கூறுவது.
   1) 1ம் வத்திக்கான் சங்கம் 2) 2ம் வத்திக்கான் சங்கம் 3) திரிதெந்தின் பொதுச்சங்கம்
   4) நிசேயா சங்கம் 5) கால்செடோன் சங்கம்

02. எகிப்தின் கிழக்கு எல்லையிலே அமைந்துள்ள கடல்.
   1) சாக்கடல் 2) கலிலேயாக்கடல் 3) செங்கடல்
   4) திபேரியாக்கடல் 5) பாரசீகக்கடல்

03. இஸ்ராயேல் மக்களை கிரகேக்கர்கள் ஆட்சி செய்த வருடங்கள்.
   1) 250 2) 230 3) 370 4) 270 5) 350

04. பலஸ்தீனரை ஆட்சி செய்த அந்நியர்களை ஒழுங்கு முறைப்படி காட்டுவது.
   1) பபிலோனியர், உரோமையர், கிரேக்கம், அசீரியர்.
   2) உரோமையர், பாரசீகர், அசீரியர், பபிலோனியர்
   3) கிரேக்கர், பாரசீகர், அசீரியர், உரோமையர்.
   4) எகிப்தியர், கிரேக்கர், அசீரியா, பபிலோனியர்.
   5) எகிப்தியர், பபிலோனியர், கிரேக்கர், உரோமையர்.

05. உரோமைப் பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு விழாவை டிசம்பர் 25 கொண்டாடத் தொடங்கிய ஆண்டு.
   1) கி.பி. 266 2) கி.பி. 456 3) கி.பி. 366 4) கி.பி. 360 5) கி.பி. 480

06. மூன்று முனைகளிலும் முறையே கார்மேல் மலை, தபோர் மலை, ஏபால் மலையையும் கொண்டு முக்கோண வடிவில் காணப்படும் சமவெளி.
   1) எஸ்திரலோன் சமவெளி 2) சாரோன் சமவெளி 3) பெலிஸ்திய சமவெளி
   4) செப்போலா சமவெளி 5) ஆக்கோ சமவெளி



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

07. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. செக்கேமில் யோசேப்பின் எலும்புகள் புதைக்கப்பட்டன.

B. திபேரியா நகரை உரோமைப் பேரரசர் திபேரியு சீசர் கட்டினார்.

C. கி.பி 4 இல் கொன்சன்ரைன் பெத்லகேமில் பெரியதொரு ஆலயத்தைக் கட்டினான்.

D. பெத்தானியாவில் இயேசு குருடனுக்கு பார்வை அளித்தார்.

E. எப்ரோனில் ஆபிரகாமும் சாராளும் அடக்கம் செய்யப்பட்டனர்.

இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை.

1) A B C  2) A C D  3) B C D  4) C D E  5) A C E

08. ஆபிரகாமின் வாழ்வோடு தொடர்பு அல்லாதது.

1) இஸ்ராயேலரின் குலத்தந்தை.
2) இஸ்ராயேலரின் வரலாறு ஆபிரகாமோடு ஆரம்பிக்கிறது.
3) பிறப்பு முதலே ஒரே கடவுள் கொள்கையை உடையவர்.
4) காரான் என்னும் இடத்தில் இறைவனால் அழைக்கப்பட்டார்.
5) ஈசாக்கை இறைவனுக்காகப் பலியிட முன்வந்தார்.

09. மெசப்பத்தேமிய மன்னன் கூசான் ரிசாத்தாயிடமிருந்து இஸ்ராயேல் மக்களை மீட்டெடுத்த நீதித்தலைவர்.

1) தெபோரா  2) கிதியோன்  3) அபிமெலெக்  4) ஒத்னியேல்  5) சிம்சோன்

10. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. இறைவாக்கினர் எலியா உண்மைக்கடவுளை எடுத்துக்காட்டி பாகால் வழிபாட்டைக் கண்டித்தார்.

B. தம் சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்வர் என எசேக்கியேல் நம்பிக்கையூட்டினார்.

C. யூதர்களின் தொழுகைக்கூட வழிபாடு ஆரம்பமாகியது.

D. யூத சமய, சமூக கலாசார வளர்ச்சிக்கு எஸ்ரா, நெகேமியா பங்களிப்புச் செய்தனர்.

E. யூதர்களின் சமய, சமூக கலாசார வாழ்வில் பாரிய மாற்றங்களும் சீரழிவுகளும் ஏற்பட்டன.

இவற்றுள் பபிலோனிய நாடுகடத்தலின் போது உள்ள விடயங்களை கூறும் கூற்றுக்களை தெரிக.

1) A D E  2) C D E  3) B C E  4) A B D  5) A C E

11. எகிப்திய தளபதி தாலமியிடமிருந்து பலஸ்தீனாவைக் கைப்பற்றிய மன்னன்.

1) நாதாப்  2) ஆகாசு  3) அமட்சியா
4) ஆகாப்  5) 3ம் அந்தியோக்கு

12. உரோமைப் பேரரசின் முதல் பேரரசனும் தளபதியுமாக விளங்கியவர்.

1) ரோமுலஸ்  2) யூலியஸ்  3) திபேரியுசீசர்  4) தொமிசியன்  5) பொம்பேயி

13. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. உரோமைப் பேரரசு இவருக்கு ஆளுநர் பட்டத்தை வழங்கியது.

B. ஏரோதின் குடும்பத்தில் தனிப்பிறவி எனலாம்.

C. மீன்பிடித் துறைமுகமான பெத்சாயிதாவைத் தலைநகராகக் கொண்டவர்.

D. பெரிய ஏரோதுக்கும், எகிப்திய கிளியோப்பட்ரா என்பவருக்கும் பிறந்தவர்.

E. யூதர்களின் நன்மதிப்பைப் பெற எருசலேம் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினார்.

குறு நில மன்னன் பிலிப்போடு தொடர்புடைய கூற்றுக்கள்.

1) A B C  2) B C D  3) C D E  4) B C E  5) A D E



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

14. மெசியாவின் வருகைக்காக காத்திருப்பதைவிடுத்து தாமே நேரடியாக விடுதலையை அடைய வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்வர்கள்.
1) சதுசேயர்கள் 2) பரிசேயர்கள் 3) மறைநூல் அறிஞர்கள்
4) எசீனியா 5) தீவிரவாதிகள்

15. கிரேக்கத்தில் 'பரபோல' என்ற சொல் குறித்து நிற்பது.
1) பழமொழி 2) நொடி 3) உவமை 4) உருவகம் 5) விடுகதை

16. இயேசு செய்த புதுமைகளில் இயற்கை தொடர்பான புதுமை அல்லாதது.
1) நூற்றுவத்தலைவனின் பணியாளைக் குணப்படுத்தல்.
2) இறந்தோரை உயிர்பெறச் செய்தல்.
3) காற்றையும் கடலையும் அடக்குதல்.
4) தண்ணீரை இரசமாக்குதல்.
5) உணவை பலுகச் செய்தல்.

17. இனத்தூய்மை இல்லாதவர்கள் என யூதர்களால் கருதப்பட்டவர்கள்.
1) வரிதண்டுவோரும் ஏழைகளும் 2) சமாரியரும் புற இனத்தவரும்
3) சமாரியரும் வரிதண்டுவோரும் 4) வரிதண்டுவோரும், புற இனத்தவரும்
5) பெண்களும் ஏழைகளும்

18. யூதர்களின் விருந்தின் போது விருந்தினர்களின் பாதங்களைக் கழுவுதல்.
1) எஜமான் 2) இல்லத்தலைவி 3) கூலியாள்
4) பெண்கள் 5) அடிமை

19. இயேசுவின் மரணம் இறைத்தந்தையை மாட்சிப்படுத்தும் வெளிப்பாடாகும் எனக் கூறும் திருத்தூதர்.
1) மத்தேயு 2) பேதுரு 3) அந்திரேயா 4) யாக்கோபு 5) யோவான்

20. இயேசுவின் அடக்கச் சடங்கில் பங்குகொண்டோர்.
1) பேதுரு, யோவான் 2) யோசேப்பு, நிக்கதேமு
3) சீரோன், ஊர்சீமோன், யோசேப்பு 4) சீமோன், யோவான்
5) யோசேப்பு, பேதுரு

21. பேதுருவின் முதல் அருள் உரையின் பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. இயேசுவே ஆண்டவராகிய மெசியா.
B. தூய ஆவியின் கொடைகளை நிறைவாகப் பெற்றார்கள்.
C. அவரோ மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார்.
D. கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல்.
E. யூதர்கள் அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றார்கள்.
இவற்றுள் பேதுருவின் அருளுரையின் சாராம்சங்களாவன.
1) A D E 2) A C D 3) B D E 4) A B E 5) A C E

22. பின்வருவனவற்றுள் புனித பவுல் இரண்டாம் மறைதூதுப் பயணங்களின் போது சென்ற இடங்களை சரியாகக் காட்டுவது.
1) லிஸ்திரா, பிலிப்பி, எதென்ஸ், கொரிந்து.
2) சைப்பிரஸ், பெருகை, பிசிதியா, அந்தியோக்கியா, லிஸ்திரா.
3) சைப்பிரஸ் தீவு, பிலிப்பி, பெருகை, தெருபை.
4) துரோவா, மிலேத்து, செசாரியா, எபேசு.
5) சைப்பிரஸ் தீவு, பெருகை, மிலேத்து, பிசிதியா அந்தியோக்கியா.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

23. பின்வரும் கூற்றுக்களுள் உரோமைக் கலாபனை பற்றி காட்டும் விடயங்கள்.
 A. கிறிஸ்தவர்கள், அந்நியச் சிலைகளை வழிப்படுவதை பாவமாகக் கருதியமை.
 B. இயேசுவின் போதனைகளும் செயற்பாடுகளும் அவர்களின் எதிர்பார்ப்பிற்கு முரணாக இருந்தது.
 C. உலகில் நிகழும் அழிவுகளுக்கெல்லாம் கிறிஸ்தவர்களே காரணம் என்று கூறப்படதமை.
 D. கிறிஸ்தவர்களின் பிரிவினைப் போக்கும் நடைமுறைகளும்.
 E. இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொண்ட பாவமே என அவர்கள் மேல் பழிபோட்டனர்.
 1) A B C  2) B C D  3) C D E  4) A C D  5) B D E

24. முதல் நான்கு உரோமைக் கலாபனைக்குக் காரணமான அரசர்களைக் காட்டும் தொகுதிகள்.
 1) செப்திமுஸ் செவரஸ், மாற்குஸ் அவுரேலியன், மக்சிமின் திராசியன், வலேரியன்.
 2) நீரோ, தொமிசீயன், திராயன், மாற்குஸ் அவுரேலியன்.
 3) நீரோ, தொமிசியன், அவுரேலியன், தீசியுஸ்.
 4) நீரோ, செப்திமுஸ் செவரஸ், திராயன், தீசியுஸ்
 5) நீரோ, திராயன், தீசியுஸ், வலேரியன்

25. அந்தியோக்கிய மறைக்கல்வி கூடத்தினால் உருவாக்கப்பட்ட இறையியல் சிந்தனையாளர் அல்லாதவர்.
 1) ரியூடோர்  2) எயுசேபியஸ்  3) டயோனிசியுஸ்
 4) சிறில்  5) ஆரியுஸ்

26. புனித ஏரிஜன் பற்றி காட்டும் சரியான கூற்றுக்கள்.
 A. இரும்பு மனிதன் என அழைக்கப்பட்டார்.
 B. கிறிஸ்துபேத ஆதாரம், பிரமாணங்கள் என்பவை அவர் எழுதிய முக்கிய நூல்களாகும்.
 C. பேரரசர் ரெப்திமுஸ் செபருசின் கலாபனையின் போது கிறிஸ்தவர்களை சிறையில் சந்தித்து ஊக்கப்படுத்தினார்.
 D. கிறிஸ்தவ அறிமுகம், ஆன்மீக வாழ்வின் இரகசியம் என்னும் நூல்களை எழுதினார்.
 E. முதன் முதலில் இலத்தீன் மொழியில் கிறிஸ்தவ நூல்களை எழுதினார்.
 F. 1) A C E  2) A B C  3) B C D  4) C D E  5) A D E

27. நெஸ்தோரிய வாதத்திற்கு எதிரான சரியான கூற்று.
 1) கிறிஸ்து ஓர் ஆள், இறையாள் எனவும் அவருக்கு தெய்வீகம், மானுடம் என்னும் இரு இயல்புகளும் ஒழுங்கே உள்ளன.
 2) கிறிஸ்து உண்மையாகவே கடவுளின் மகன் என்றால் மகன் இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும்.
 3) கிறிஸ்துவில் ஒரு ஆள் மட்டுமல்ல ஒரு சுபாவம் மட்டுமே உள்ளது.
 4) இந்தப்பறையைக் கண்டனம் செய்ய கொன்ஸ்தாந்தி நோபிலில் ஒரு திருச்சங்கம் கூட்டப்பட்டது.
 5) நெஸ்தோரிய வாதத்திற்கு எதிராக போராடியவர்களுள் திருத்தொண்டர் அத்தனாசியார் மிக முக்கியமானவர்.

28. கி.பி 6ம் நூற்றாண்டு காலப்பகுதிக்கான மறைபரப்பாளர் அல்லாதவர்.
 1) புனித பொனிபஸ்  2) மகா கிரகோரியார்  3) புனித அகுஸ்தீனர்
 4) புனித பற்றிக்  5) புனித கொலம்மா



agaram.lk

www.agaram.lk

29. கீழைத்தேய திருச்சபை இறுதியாக உரோமைத் திருச்சபையிலிருந்து பிரிந்த காலப்பகுதி.
   1) கி.பி 1064.07.18 2) கி.பி 1054.07.16 3) கி.பி 1954.08.15
   4) கி.பி 1545.07.17 5) கி.பி 1546.07.18

30. சிலுவைப்போர் இயக்கம் வளர்ச்சியடையத் துணைநின்ற காரணியாகக் கருதப்படக்கூடியது.
   1) கி.பி 15ம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி
   2) கிறிஸ்தவ கலைகளின் வளர்ச்சி
   3) எருசலேம் நகரம் பல காரணங்களால் முக்கியத்துவம் பெற்றிருந்தமை.
   4) நடுத்தர வர்க்கங்களின் தோற்றம்.
   5) காலிப் ஓமாரும் அவரது வாரிசுகரும் புனித நாட்டை வழிபட தடைவிதித்தமை.

31. மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயச் சிந்தனையாளராகிய சுவிங்கிளி பற்றி காட்டும் கூற்றுக்கள்.
   A. சுவிற்சலாந்து படைவீரர் மத்தியில் ஆன்மீக குருவாகப் பணியாற்றினார்.
   B. கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள் எனும் நூலை எழுதியுள்ளார்.
   C. தேவதாய்க்கும் திருப்பயணத்திற்கும் எதிராக போதிக்கலானார்.
   D. தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் நோன்பு இருக்கும் பழக்கத்தை விமர்சித்தார்.
   1) A C E 2) A B C 3) A D E 4) A C D 5) A B E

32. 16ம் நூற்றாண்டில் சமய மறுமலர்ச்சிக் காலத்தில் கத்தோலிக்க திருச்சபையின் சீர்திருத்தத்திற்கு உழைத்தவர்.
   1) மாட்டின்லூதர், சுவிங்லி, கல்வின், தோமஸ் முன்ற்சர்.
   2) பீட்டர் வால்டோ, புனித பிரான்ஸ் அசீசியார், புனித டொமினிக், சைமன் ஸ்டொக்.
   3) புனித கயித்தான், புனித இக்னேசியஸ் லொயலா, புனித வின்சென்தே பவுல், புனித அவிலா திரேசா.
   4) புனித கொலம்பா, புனித பற்றிக், புனித அகுஸ்தினார், புனித பொனிபஸ்.
   5) ஓரிஜன், யுஸ்தின், தோர்த்துலியன், புனித அகுஸ்தினார்.

33. முதன் முதலில் பங்கு பாடசாலைகளை உருவாக்கியதாகக் கருதப்படும் துறவறசபை.
   1) புனித பெனடிக்ற்சபை 2) புனித அகுஸ்தீனார் சபை 3) இயேசு சபை
   4) டொமினிக்சபை 5) கார்மேல் சபை

34. நோத்திரடாம் பேராலயத்தைச் சேர்ந்த பல கதீற்றல் பாடசாலைகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம்.
   1) பொலஞ்ஞா பல்கலைக்கழகம் 2) பரிஸ் பல்கலைக்கழகம்
   3) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 4) கலமன்கா பல்கலைக்கழகம்
   5) ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

35. கி.பி. 5ம், 6ம் நூற்றாண்டுகளில் உரோமைப்பேரரசுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது.
   1) கிறிஸ்தவ சமயத்தின் துரித வளர்ச்சி.
   2) சமயச் சிந்தனைவாதிகளின் வளர்ச்சி.
   3) ஏனைய பேரரசுகளின் வளர்ச்சி.
   4) இலக்கியம், கலைகளின் அதித வளர்ச்சி.
   5) ஐரோப்பிய பழங்குடியினரின் நடவடிக்கைகள்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

36. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. பொஸ்டன் நகரில் செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கான பல்கலைக் கல்லூரி ஒன்றை உருவாக்கினார்.

B. 1876 இல் தொலைபேசிக் கருவியைக் கண்டுபிடித்தார்.

C. திருவிவிலியத்தில் உள்ளவற்றை விஞ்ஞானத்தரவுகளூடாக ஆய்வு செய்து நூல்களை எழுதினார்.

D. நவீன பௌதிகவியலின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

E. 1929 இல் பென்சிலின் என்னும் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தனர்.

அலெக்சாண்டர் கிரஹம்பெல் என்பவருடன் தொடர்புடைய கூற்றுக்கள்.

1) B C 2) A B 3) C D 4) D E 5) A C

37. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. உந்தியல்புக் காரணி.

B. வினாவை முன்வைத்தல்.

C. சார்பான, எதிரான விவாதங்களை கொணருதல்.

D. முடிவுக்காரணி.

E. அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய முடிவை வழங்குதல்.

ஸ்.கொலாஸ்டிக் படிமுறைகளைக் காட்டும் கூற்றுக்கள்.

1) A B C 2) B C D 3) C D E 4) B C E 5) A D E

38. ஜோன் பனியன் கிறிஸ்தவ ஒப்புவமையை மையமாகக் கொண்டு எழுதிய நூல்.

1) மார்புக் கவசம் 2) மீளப் பெற்ற இன்பவனம் 3) கோபத்தின் நாள்
4) ஆன்மீகக் கீதம் 5) யாத்திரிகளின் பயணம்

39. கிறிஸ்தவ சித்திரக்கலையின் தெய்வீக ஓவியர் என்று அழைக்கப்படுபவர்.

1) மைக்கல் ஆஞ்சலோ 2) இறபாயல் சன்சியோ 3) லியோனாடோ டாவின்சி
4) பியாட்டோ டக்சியோ 5) கியோற்றோ

40. ஜப்பானில் கிறிஸ்தவ மதம் தடைசெய்யப்பட்ட காலப்பகுதி.

1) கி.பி 1612 2) கி.பி 1597 3) கி.பி 1610
4) கி.பி 1861 5) கி.பி 1583

❖ **பின்வரும் விடயங்களை அவதானித்து 41, 42 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

A. ஞானப்பள்ளு
B. உடன்படிக்கையும், அன்னை மரியாளும்
C. ஞானார்த்த பிரதீபய
D. பக்தி பிரபோதன
E. போல் நவரத்தின
F. சந்தியோகுமையோர் அம்மானை
G. ஹென்றிக்கஸ்
H. பேரரசன் கொன்சன்ரைனின் மனமாற்றம்

41. ஆங்கிலேயர் கால கிறிஸ்தவ சிங்கள இலக்கியங்கள்.

1) C D 2) A B 3) E F 4) G H 5) F G

42. போர்த்துக்கேயர் காலத்தில் மேடையேற்றப்பட்ட கிறிஸ்தவ நாடகங்கள்.

1) A C 2) A F 3) B H 4) F H 5) B F



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

43. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆயர் பெற்றக்கிளியின் மறையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் திருத்தந்தையின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டவர்.
   1) ஆயர் பொற்ஜீன்   2) அருட்பணி S. G பெரேரா   3) ஆயர் செமேரியா
   4) ஆயர் எட்மன் பீரிஸ்   5) சுவாமி ஞானப்பிரகாசம்

44. இலங்கையின் முதல் சுதேச ஆயராகவும் முதல் சிங்கள ஆயராகவும் திரு நிலைப்படுத்தப்பட்டவர்.
   1) எட்மன் பீரிஸ்   2) பீற்றர் பிள்ளை   3) H.S. தாவீது
   4) S. G. பெரேரா   5) R.S.D. சேரம்

45. இலங்கையில் முதல் மருத்துவமனை டாக்டர்கிறீன் அவர்களால் எங்கே அமைக்கப்பட்டது.
   1) சில்லாலை   2) உடுவில்   3) மானிப்பாய்
   4) மாதகல்   5) பண்டதரிப்பு

46. உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம் உருவாக்கமடைந்த காலம், நாடு இடம் யாது?
   1) 1858 சுவீடன் உப்சலா   2) 1947 அவுஸ்ரேலியா கன்பரா
   3) 1968 பிறேசில் போர்டே அலிக்ரே   4) 1948 நெதர்லாந்து அம்ஸ்டர்டம்
   5) 1958 சுவிற்சலாந்து மனிலா

47. இன்று திருச்சபையின் மறை வல்லுநராகவும் கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கும் அறிவியலாளர்களுக்கும் பாதுகாவலராக திருச்சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டவர்.
   1) புனித அகுஸ்தினார்   2) புனித தோமஸ் அக்குவைனஸ்
   3) புனித அவிலா திரேசா   4) மைக்கல் ஆஞ்சலோ
   5) தேர்த்துலியன்

48. ஓரத்தோரியோ இசை முறைக்கு வித்திட்டவராக கருதப்படக்கூடியவர்.
   1) லுட்விக்வேன் பிதோவன்   2) ஹெக்ட் பரிலியொஸ்   3) கபிரியேல் போரே
   4) குயிசெப்போ வர்டி   5) ஜோர்ஜ் பிரட்றிக்

49. போர்த்துக்கேயர் காலத்தில் வீழ்ச்சியுற்ற பௌத்த சமயத்தை மீண்டும் கட்டியெழுப்ப முன்னின்று செயற்பட்டவர்.
   1) சேனாசம்பத்   2) 1ம் விமலதர்மசூரியன்   3) 9ம் தர்ம பராக்கிரமபாகு
   4) 7ம் புவனேகபாகு   5) டொன்யுவான்

50. "கிறிஸ்துவின் பணியைச் செயற்படுத்துவதற்கு காலத்தின் குறிகளைத் துழாவி அறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லாக் காலகட்டங்களிலும் விளக்கி உரைப்பது திருச்சபையின் கடமையாகும் எனக் கூறப்பட்டிருப்பது.
   1) அன்னையும் ஆசிரியையும் என்ற சுற்றுமடலில்.
   2) திருச்சபையின் சமூக ஈடுபாடு என்ற சுற்றுமடலில்.
   3) இன்றைய உலகில் திருச்சபை என்ற சுற்றுமடலில்.
   4) சமூக ஒழுங்கமைப்பு என்ற சுற்றுமடலில்.
   5) அவனியில் அமைதி என்ற சுற்றுமடலில்.



agaram.lk

www.agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | கிறிஸ்தவ நாகரிகம் II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

❖ பகுதி 'I' இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01. 1) புனித தோமஸ் அக்குவைனசின் ஆக்கங்கள் நான்கைக் குறிப்பிடுக.
2) மறுமலர்ச்சிக்காலக் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள் நான்கு தருக?
3) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் ஆக்கங்கள் நான்கினை எழுதுக?
4) ஆங்கிலேயர் காலக் கிறிஸ்தவ இலக்கியங்கள் நான்கினைத் தருக.
5) கார்மேல் ஆண்கள் சபைத் துறவிகளுக்கான சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த சிலுவை யோவானால் எழுதப்பட்ட நூல்கள் நான்கினை எழுதுக.

02. 1) திருச்சபையின் சமுதாயப் படிப்பினை ஏடுகளில் நான்கினைக் குறிப்பிடுக.
2) 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிலிப்பைன்ஸ் நாடு அமெரிக்கரின் ஆட்சியின் கீழ் வந்தமையினால் ஏற்பட்ட விளைவுகள் நான்கினை எழுதுக?
3) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் பிரான்சிஸ்கன் சபையினரால் மேற்கொள்ளப்பட்ட கல்விப்பணிகள் நான்கு தருக?
4) உரோமனெக்ஸ் கட்டடக்கலையின் சிறப்பம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
5) இந்தியாவில் வில்லியம்கேரி புரட்டஸ்தாந்து திருச்சபைக்கு ஆற்றிய பணிகள் நான்கு தருக?

03. 1) உரோமையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதல் நான்கு கலாபனைகளுக்கும் காரணமான அரசர்களைக் குறிப்பிடுக?
2) இயேசுவின் மரணம் பற்றிய யோவானின் சிறப்புக் கருத்துக்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3) யூத சமூகப் பிரிவில் விருந்தோம்பலின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக?
4) புனித பவுலின் படிப்பினைகளில் காணப்படும் கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகளின் கடமைகள் பற்றி குறிப்பிடுக?
5) யூதவரலாற்றில் எருசலேம் நகரம் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் நான்கைத் தருக?



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

## பகுதி II

04. அ) கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சிக்கு கிரேக்க நாகரிகம் பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்துள்ளது என்பதனை நீர் ஏற்றுக் கொள்கிறீரா? விளக்குக?

ஆ) இலங்கை மக்களின் வாழ்வின் வளர்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் தேவையான விழுமியப் பண்புகளை குறிப்பிட்டு, அவை எவ்வாறு சமூக வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் பங்களிப்புச் செய்கின்றன என்பதனை விளக்குக.

05. அ) மறுமலர்ச்சிக்கால சித்திரக்கலைக்கு லியோனாடோ டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ ஆகியோர் வழங்கிய பங்களிப்புக்களை விளக்குக?

ஆ) கலைகள் கடந்தகால நிகழ்வுகளைக் காட்டும் நிகழ்காலக் கண்ணாடிகளாகும் என்பதனை கிறிஸ்தவ கலைகளினூடாக விளக்குக?

06. அ) போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்பே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் கிறிஸ்தவம் பரவியுள்ளது என்பதனை ஆதாரங்களுடன் விளக்குக?

ஆ) இலங்கை, இந்தியா நாடுகளின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவம் ஆற்றியுள்ள பங்களிப்புகளை விளக்குக?

07. அ) மறுமலர்ச்சிக் காலத்தில் திருச்சபையின் வளர்ச்சிக்கு இயேசுசபை ஆற்றிய பங்களிப்புகளை விளக்குக.

ஆ) எமது இலங்கை நாட்டின் முன்னேற்றத்திற்கு அன்றும் இன்றும் துறவற சபைகள் பணியாற்றி வருகின்றன என்பதனை விளக்குக?

08. அ) இறையாட்சியை வெளிப்படுத்தும் அடையாளமாக புதுமைகள் விளங்குகின்றன. விளக்குக?

ஆ) இறையாட்சியை சமூகத்தில் நிலை நாட்டுவதற்கு வளர்க்கப்பட வேண்டிய விழுமியப்பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக?



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk